DEPOSITION OF WITNESS

**In the Court of II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No :134/2026**
**Present – S.Gopinathan, B.Sc.,B.L.,**
**II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**
Prosecution witness - 2 (LW -2)
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **திரு.பொன்னரசு** | Caste | : | |
| Father Name | : | **திரு.** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **10.07.2026.**

**PW -2 (LW -2 )**

**(**எதிரி ஆஜர்**.) (**சாட்சி அவருடைய ஆதார் அட்டை மற்றும் சம்பந்தப்பட்ட போலிசார் மூலம் அடையாளம் காணப்பட்டார்**.)**

**முதல் விசாரணை:**

நான் கடந்த 27.12.2024 அன்று திருச்சி மாவட்ட ஆயுதப்படை பிரிவில் காவலராக பணிபுரிந்த போது திருச்சி உணவு பாதுகாப்பு அதிகாரி திரு.இப்ராஹிம் அவர்கள் சோதனை மற்றும் கண்காணிப்பு சம்பந்தமாக எங்கள் உயர் அதிகாரிகளிடம் கூறியதன் பேரில் நான் அவருடன் முசிறி பெரியார் பாலம் அருகில் உள்ள பேக்கரிக்கு சென்றோம். அதன் பெயர் முருகன் பேக்கரி.

அங்கு அ.சா.1 சோதனை செய்தார். அங்கு அதன் உரிமையாளர் ஆஜர் எதிரி இருந்தார். சோதனையின் பொழுது தடை செய்யப்பட்ட பாக்குகள் மற்றும் புகையிலை இருந்தது. அவர் அதை கைப்பற்றி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்ததற்கு நான் உதவியாக இருந்தேன். என்னை முசிறி ஆய்வாளர் விசாரித்தார்.

II ADDL COURT TRICHY

**எ.த.கு.வி** :

| | |
|---|---|
| **கேள்வி** | நீங்கள் சோதனை செய்யும் இடத்தின் அருகில் நிறைய கடைகள் மற்றும் ஆட்கள் இருந்தார்கள் என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | அப்படி சோதனை செய்யும் பொழுது கைப்பற்றியதாக சொல்லும் பொருட்களுக்கு சாட்சியாக இருக்க சொல்லி அருகில் உள்ளவர்களை அழைத்தாரா என்றால்? |
| **பதில்** | இல்லை. |
| **கேள்வி** | நீங்கள் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்திற்கு ஆய்வு செய்ய போகவில்லை என்றாலும், அ.சா.1 அரசு அதிகாரி என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறீர் என்றால்? |
| **பதில்** | சரியல்ல. |
| **கேள்வி** | முருகன் பேக்கரிக்கும், முசிறி காவல் நிலையத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும்? |
| **பதில்** | சுமார் 1.5 கி.மீ தூரம். |
| **கேள்வி** | அ.சா.1 முசிறி காவல் நிலையத்தில் உதவி கேட்டிருந்தால் செய்திருப்பார்கள் என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | முருகன் பேக்கரி இருந்தது முசிறி காவல் துறைக்கும் தெரியும் என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | நால்ரோடு பிரியும் இடத்தில் எப்பொழுதும் காவலர்கள் இருப்பார்கள் என்றால்? |
| **பதில்** | இருப்பார்கள். |
| **கேள்வி** | அதற்கும் முருகன் பேக்கரிக்கும் இடையே எவ்வளவு தூரம்? |
| **பதில்** | 1.5 கி.மீ |

**மறுவிசாரணை** : இல்லை.

திறந்த வெளி நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நேரடியாக என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்ட பின் இன்று 10.07.2026 என் முன்பு கையெழுத்து செய்தார்.

Sd/.Thiru.S.Gopinathan,

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.

தேதி: 10.07.2026

II ADJ COURT TRICHY